**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், பங்குனித்திங்கள் 13 ம் நாள்

**அசல் வழக்கு எண்.118/2023**
**CNR No.TNTI14 – 000130–2023**

நல்லமுத்து ... வாதி

/எதிர்/

S.சிதம்பரம் ... பிரதிவாதி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 15.03.2024 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அங்குராஜ்,B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**தீர்ப்புரை**

வாதிக்குப் பிரதிவாதி ரூ.52,080/–ம் அசல் தொகை ரூ.40,000/–க்கு பின்வட்டியும் கிடைக்கும் படிக்கும், தாவா செலவுத்தொகை வாதிக்குப் பிரதிவாதியால் கிடைக்கும்படிக்கும், இன்னும் கோட்டாரவர்களுக்கு யுக்தமாய் தோன்றுகிற இதர பரிகாரங்கள் யாவும் வாதிக்கு பிரதிவாதியால் கிடைக்கும்படிக்கும் பிரதிவாதி பேரில் ஒரு தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்புவிக்க

வேண்டுமென்று வாதியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:–</u>**

i) பிரதிவாதி வாதியிடம் கடந்த 20.12.2020 அன்று ரூ.40,000/–(ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) தனது அவசர நிமித்தம் குடும்ப செலவிற்காகவும் வியாபாரத்திற்காகவும் கடனாக ரொக்கம் பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி சேர்த்துக்கூடிய வட்டியையும் அசலையும் வாதிக்காவது அவரின் உத்தரவு பெற்றவர்களுக்காவது வேண்டும் போது செலுத்துவதாக ஒப்புக்கொண்டு 20.12.2020 தேதியில் வாதிக்கு பிரதிவாதி சாட்சிகள் முன்பாக வாதி வீடு அமைந்துள்ள திருப்பூர் மாவட்டம் காங்கயம் வட்டம் சேனாபதிபாளையம் கிராமம், கள்ளமடை, கதவு எண்.105 ல் உள்ள வாதியின் வீட்டில் வைத்து ஒரு கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுத்திருக்கிறார்.

ii) தாவா கடனுறுதிச் சீட்டுக்குண்டான அசல் வட்டியை செலுத்துமாறு வாதி பிரதிவாதியை பலமுறை நேரில் கேட்டும் வீண்சாக்குபோக்கு கூறிவருகிறார். வாதி வழக்கறிஞர் மூலம் கடந்த 22.08.2022 தேதியில் அசல் வட்டி தொகையை செலுத்துமாறு பதிவுத்தபால் அறிவுப்பு அனுப்பப்பட்டது. அறிவிப்பினை பிரதிவாதி 26.08.2022 ல் அறிவிப்பை பெற்றுக்கொண்டார். தாவா பிராமிசரிக்குண்டான அசல் வட்டி தொகைகளை பிரதிவாதி வாதிக்கு நாளதுவரை செலுத்தவுமில்லை, பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை.

iii) வாதிக்கு ரூ.3,00,000/– பெறுமானமுள்ள சொத்துக்கள் உள்ளது. வாதி

வியாபாரம் மூலம் நல்ல வருமானம் பெற்று வருகிறார். வாதிக்கு கடன் கொடுக்குமளவிற்கு போதிய வசதியும் வருமானமும் உண்டு. பிரதிவாதிக்கு ரூ.2,00,000/-க்கும் அதிகம் பொருமானமுள்ள சொத்துக்கள் உள்ளது. வருடம் 2,00,000/-க்கும் அதிகமாக வருமானம் ஈட்டிவருகிறார். பிரதிவாதி பிராமிசரியில் 12% வீதம் வட்டி கொடுப்பதாக ஒப்புக் கொண்டபடியே வட்டி வாதியால் கோரப்படுகிறது.

iv) ஆகையால் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து வாதிக்குப் பிரதிவாதி ரூ.52,080/-ம் அசல் தொகை ரூ.40,000/-க்கு பின்வட்டியும் கிடைக்கும் படிக்கும், தாவா செலவுத்தொகை வாதிக்குப் பிரதிவாதியால் கிடைக்கும்படிக்கும், இன்னும் கோட்டாரவர்களுக்கு யுக்தமாய் தோன்றுகிற இதர பரிகாரங்கள் யாவும் வாதிக்கு பிரதிவாதியால் கிடைக்கும்படிக்கும் பிரதிவாதி பேரில் ஒரு தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்புவிக்க வேண்டும் என்பதே வாதியின் வழக்குரை சுருக்கம் ஆகும்.

2. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில் வாதிக்கு தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும். வாதி தரப்பில் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**3. பிரச்சனைக்குரிய தீர்வு:-**

4. வாதி தரப்பு வாதத்தையும், வழக்காவணங்களையும் பரிசீலித்து பார்க்கையில், இவ்வழக்கானது தாவா தொகை ரூ.52,080/-ம், அசல் தொகை ரூ.40,000/-க்கு பின்வட்டியும் பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கிடைக்கும்படிக்கு வாதியால் தாவாவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாதால் பிரதிவாதி ஒருதலைபட்ச உத்தரவுக்குள்ளாக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.1 ஆக வாதி நல்லமுத்து விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. வாதியிடம் இருந்து பிரதிவாதி அவருடைய குடும்ப செலவிற்காக 20.12.2020 ம் தேதியில் ரூ.40,000/- கடனாக பெற்றுக்கொண்டு, மேற்படி தொகைக்கு மாதம் 1 க்கு ரூ.100/-க்கு ரூ.1.00 வீதம் வட்டி சேர்த்து வாதிக்காவது, அவர் உத்தரவுக்காவது வேண்டும்போது செலுத்துவதாக ஒப்புக்கொண்டு வாதிக்கு பிரதிவாதி தாவா பிராமிசரி நோட் எழுதிக் கொடுத்திருக்கிறார் என்று வாதி தனது தாவா வழக்குரை மற்றும் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். வா.சா.ஆ.1 ஆக 20.12.2020 தேதியிட்ட அசல் கடனுறுதிச்சீட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆக 22.08.2022 ம் தேதியிட்ட வாதி தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிவுத்தபால் அறிவிப்பின் அலுவலக நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் வா.சா.ஆ.3 ஆக பிரதிவாதி மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. வா.சா.1 தனது சாட்சியத்தில், **பிரதிவாதி என் வீட்டுக்கு வந்து தான் வாதியான கள்ளமடை நல்லமுத்து ஓய்வு பெற்ற ஆசிரியரிடம் கடன் ரூ.40,000/- கேட்டிருப்பதாகவும் பிராமிசரி நோட்டை எழுதிக்கொடுத்து சாட்சி கையெழுத்துக்கள் செய்யவும் வர வேண்டுமென எங்களை அழைத்தார். நாங்கள் இருவரும் சம்மதித்து பிரதிவாதியுடன் வாதியின்**

**வீட்டுக்குச் சென்றோம். பிரதிவாதி வாதியியிடம் பணம் தயாராக உள்ளதா என கேட்டார். வாதி தயாராக உள்ளது. பிராமிசரி எழுதிக்கொடுத்துவிட்டு பணம் பெற்றுக்கொள்ளுமாறு கூறினார். பிரதிவாதி கொண்டு வந்திருந்த பிராமிசரி நோட்டு பாரத்தை என்னிடம் கொடுத்து எழுதித் தருமாறு கேட்டார். நான் பிராமிசரி பாரத்தை வாங்கி கடன் அன்றைய ஆங்கில தேதி தமிழ் தேதிகளை பூர்த்தி செய்துவிட்டு வாதியின் முகவரியை கேட்டு எழுதினேன். பின்பு பிரதிவாதியிடம் முகவரியை கேட்டு எழுதிவிட்டு மற்ற பிராமிசரிக்கான விபரங்களை கேட்டு பிராமிசரி பாரத்தை பூர்த்தி செய்து படித்துக் காண்பித்தேன். அதன்பின் பிராமிசரியில் ஏற்கனவே ஒட்டப்பட்டிருந்த ரெவென்யூ ஸ்டாம்பின் மீது பிரதிவாதி கையெழுத்து செய்தார். பிரதிவாதி தனது இடது கை பெருவிரல் ரேகையை அதற்கான கட்டத்தில் பதித்தார். பிராமிசரி பாரத்தில் கையெழுத்து என அச்சிட்டதன் கீழாக மற்றொரு கையெழுத்தும், தனி எழுத்தில் என அச்சிட்டதற்கு கீழாக பிரதிவாதி மற்றொரு கையெழுத்தையும் போட்டார். பிரதிவாதி வாதியிடம் இருந்து ரூ.40,000/-ஐ பெற்று எண்ணிப்பார்த்துவிட்டு சரியாக இருப்பதாகக் கூறினார்** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7. வழக்குரையில் வாதி கூறியுள்ள சங்கதிகளை மறுத்து பிரதிவாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தனது சாட்சியங்களை முன்னிலைப்படுத்தி இருக்க முடியும். ஆனால் பிரதிவாதி தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக உள்ளார். எனவே மேற்படி வா.சா.1 மற்றும் வா.சா.2 ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களான கடனுறுதிச்சீட்டு மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பு உள்ளிட்ட ஆவணங்களை இந்நீதிமன்றம் பரிசீலிக்கும்போது வாதியானவர் தாவா

வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளைப் பொறுத்து வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் நிரூபித்திருப்பதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே வழக்குரை சங்கதிகள் வாதியால் வா.சா.1 மற்றும் வா.சா.2 ன் சாட்சியத்தின் மூலமும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களின் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளதால் வாதி தாவாவில் கோரியபடி பரிகாரம் பெற அருகதை உடையவர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

பிரதிவாதி, வாதிக்கு தாவா தொகை ரூ.52,080/- யையும், அசல் தொகை ரூ.40,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதிவரை 9% வட்டியினையும், தீர்ப்பாணை தேதிக்கு பின்னிட்டு தொகை முழுவதும் செலுத்தப்படும் காலம் வரை 6% வட்டியினையும் மற்றும் தாவா செலவு தொகையினை 3 மாதத்திற்குள் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2024.03.26 19:30:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u> :-

வா.சா.1 நல்லமுத்து

வா.சா.2 முருகேசன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.12.2020 | தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி ரூ.40,000/-க்கு எழுதிக்கொடுத்த அசல் கடனுறுதிச் சீட்டு (வரவு எதுவும் வைக்கப்படாதது) |
| வா.சா.ஆ.2 | 22.08.2022 | தேதிய வாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிவுத்தபால் அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 26.08.2022 | தேதிய பிரதிவாதி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.4 | - | முருகன் என்பவரின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-** இல்லை.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2024.03.26 19:30:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.